# ஹைதராபாத் டாக்டர் பா.சிவா அவர்களின் இசைப்பணி

இசைத்துறையில் முனைவர் பட்டம் பெற்ற ஹைதராபாத் டாக்டர் பா.சிவா அவர்கள் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியன் தெய்வத்திருமதி கமலா இணையருக்கு இணையற்ற தவப்புதல்வராக 1975ல் பிறந்தார்.

தம் 16வது அகவையிலே இசைப் பயணத்தைத் தொடங்கிய இவர், ஹைதராபாத்தில் உயர்திரு சந்திரசேகர் என்ற இசை ஆசிரியரிடம் முதலில் சங்கீதத்தை கற்றுக்கொள்ள தொடங்கினார். அவரைத் தொடர்ந்து, திருமதி பானு கண்ணன் அவர்களிடமும் சங்கீதக் கலையைத் தொடர்ந்து கற்றார். பின்னர் சங்கீதத்தில் தன்னை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக சென்னையை வந்தடைந்து, சென்னை சங்கீத வித்வத் சபையில் இசை ஆசிரியர் பட்டய படிப்பை முடித்தார். அதே வேளையில் சென்னை பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை பயிலும் போது "சங்கீத கலாநிதி" அமரர் B.ராஜம் அய்யர் அவர்களிடமும் சங்கீதத்தை கற்றுத் தேர்ந்தார். பெருமை பெற்ற பாபநாசம் சிவன் அவர்களின் நேரடி சீடராகிய அமரர் செதலபதி பாலசுப்பிரமணியம் அவர்களிடம் இசை பயின்று தமிழிசையில் மேன்மை பெற்றார். தெய்வத்திருமதி சுந்தரவல்லி சீனிவாசன் அவர்களிடமும் பாரம்பரிய இசையைக் கற்று மேன்மை அடைந்தார்.

இசை பயிற்றுவிப்பதை இறைபணியாக மேற்கொண்ட முனைவர் சிவா அவர்கள், சென்னை விவேகானந்தா கல்விக் கழகத்திலும், பொன்னேரி ஸ்ரீ சரஸ்வதி கல்வியியல் கல்லூரியிலும் சங்கீத விரிவுரையாளராகவும் பணியாற்றி உள்ளார். அகில இந்திய ஆகாசவாணியின் இசை கலைஞராகக் மிளிர்ந்ததோடு தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மன்ற உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

சங்கீதக் கலைத்துறையில் அவர் பெற்ற வல்லமை, அர்ப்பணிப்பு, புதிய பாணியில் போதிக்கும் ஆற்றல், தமிழிசை மேம்பாடு ஆகியவற்றிற்காக பல பட்டங்கள் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாஸ்ரமம் வழங்கிய சங்கீதகலா ரத்னா, ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின் ஆஸ்தான வித்துவான், இசைச்செல்வர், ஏழிசை ஏந்தல், சந்தத் தமிழிசை செல்வர், திருப்புகழ் செம்மல், சுக கான நாத ஜோதி போன்றவை இவர் பெற்ற விருதுகள் ஆகும்.

சென்னை சங்கீத வித்வத் சபை, பொங்குதமிழ் பண்ணிசை மன்றம், பாரதிய வித்யா பவன், டெல்லி தமிழ்ச்சங்கம், இரண்டாம் அனைத்து உலக சித்தர் நீர் மாநாடு, அனைத்து உலக பஞ்சபுராண மாநாடு போன்ற எண்ணிறந்த அரங்கங்களில் இசை நிகழ்ச்சிகளை டாக்டர் சிவா நிகழ்த்தியுள்ளார். தென்னாப்பிரிக்கா, டர்பன் 3வது அனைத்து உலக முருக பக்தி மாநாடு மற்றும் ஸ்ரீலங்கா, கொழும்புவில் நிகழ்ந்த 4வது அனைத்து உலக முருக பக்தி மாநாட்டிலும் Dr சிவா அவர்கள் நிகழ்த்திய இசை நிகழ்ச்சிகள் கடல் கடந்தும் நமது தமிழிசை ஒலித்துக் கொண்டிருக்க ஒரு பாலமாக அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

மக்கள் தொலைக்காட்சியில் பல ஆண்டுகள் தொடர்ந்து இவர் மாணவச் செல்வங்களோடு இணைந்து ஒளியேற்றிய நிகழ்வுகளில் பண்பாடுவோம், மார்கழி மாத திருப்பாவை நிகழ்ச்சி, கலைக்கல்வி மூலம் தென்னிந்திய இசை, பல்வேறு ராகங்கள், திருப்புகழ் முதலிய தெய்வீக பாடல்களை சங்கீத ஞானம் உள்ளவரும், மற்றோரும் கேட்டின்புறும் வண்ணம் பல்வேறு புதிய உத்திகளைக் கையாண்டு அம்முயற்சியில் பாராட்டத்தக்க வெற்றியும் கண்டிருப்பது இவரின் தனிச்சிறப்பாகும்.

மேலும் பல தொலைக்காட்சிகளில் பல்வேறு ஒளி அலைகளில் நவராத்திரி, தீபாவளி, மகர சங்கராந்தி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் தமது இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி மக்களின் மனம் கவர்ந்து அவர்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்தவர் முனைவர் சிவா அவர்கள்.

இசை ஆசானாக லட்சக்கணக்கான ரசிகர்களை ஈட்டித் தந்த இன்னொரு நிகழ்வு, உலகப் புகழ் பெற்ற லக்ஷ்மன் ஸ்ருதியின் சென்னையில் திருவையாறு நிகழ்வில் தனது மாணவச் செல்வங்கள் 200 பேர்களுடன் அவர் ஒளி ஏற்றிய திருப்பாவை இசை நிகழ்ச்சி ஆகும்.

சங்கீதக் கலையை மேலும் வளர்ப்பதிலும் தம்மிடம் பயிலும் மாணவ மாணவியரை கை தூக்கி விடுவதிலும் அவர் காட்டும் அக்கறை அளவிடர்க்கரியது. சுமார் 250 மாணவச் செல்வங்கள் பயிலும் வண்ணம் சுகி நிகேதன் கலைக்கூடம் நிறுவி, அதற்கென ஓர் அழகிய மாளிகை எழுப்பி, சுகமான சூழலில் நவீன வசதிகளோடு கர்நாடக சங்கீதம் பயிற்றுவித்து நிறைய இசை புத்தகங்களையும் அவற்றுக்குத் துணையாக குறுந்தகடுகளையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் நவக்ரஹ கீர்த்தனைகள், நால்வர் திருமுறைகள், இசைத்தமிழ் பாமாலை ஆறு பகுதிகள் மற்றும் சின்னச்சின்ன பாட்டு போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ஆறுபடை வீட்டின் திருப்புகழ் 314 பாடல்களையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புத்தகமாக தொகுத்து வழங்கி இருப்பதும் பாராட்டிற்குரியது. மேலும் திருப்புகழ் பாடல்களை உலக அளவில் பரப்புவதற்காக திருப்புகழ் இசை பேரவை என்னும் அறக்கட்டளையை நிறுவி அதன் வாயிலாக அருணகிரிநாதர் சுவாமிகள் அருளிய அனைத்து திருப்புகழ் இசை வடிவங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

குழந்தைகள் மற்றும் சங்கீத ரசிகர்களுக்காக சிறிய திருப்புகழ் பாடல்கள் 106 தேர்வு செய்து தாளத்துடன் பண்ணமைத்து வெளியிட்டு இருப்பது மிகச்சிறப்பு. இந்த பதிவுகள் அனைத்தும் எவ்வித கட்டணமும் இன்றி இவரின் **Hyderabad Dr B Siva எனும் youtube** சேனல் வழியாக கேட்டு பார்த்து மகிழலாம்.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ் பாடல்கள் சுமார் 550 பாடல்களை ராகம் அமைத்து சந்தத்தோடு பக்கவாத்தியங்களோடு பாடி பதிவு செய்திருக்கின்றார்.அத்துடன் இறை இசை வரலாற்றில் முதன்முறையாக அறுபடை வீடுகளுக்குமான திருப்புகழ் பாடல்களை நேரடி நிகழ்வாக ICF அருள்மிகு கமல விநாயகர் சத்சங்கத்தில் இசை நிகழ்ச்சியாக அரங்கேற்றம் செய்த பெருமைக்கு சொந்தக்காரர் நமது முனைவர் சிவா அவர்கள்.

முருகப்பெருமானின் இசை வடிவங்களை ஆய்வு செய்து அதில் முனைவர் பட்டம் பெற்று, அதன் வெளிப்பாடாக இசை வரலாற்றில் முதன்முறையாக ஸ்ரீ வள்ளி கல்யாணம் என்னும் சம்பிரதாயத் திவ்ய நாம பஜனையை தம் மாணவச் செல்வங்களுக்கு போதித்து அதை மேடை நிகழ்வாக பல இடங்களிலும் மக்கள் உள்ளம் கவர நடத்தி வருகிறார்.

கானாடுகாத்தான் ஸ்ரீ விஸ்வநாதகவியின் “கீத காங்கேய காவியம்“ என்னும் இசை வடிவத்தை, அதாவது குஹாஸ்டபதியாக போற்றப்படும் 24 பாடல்களையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகிறார். அது மட்டுமின்றி ஸம்ப்ரதாய சுப்ரமணிய திவ்ய நாமத்தையும் குழந்தைகளிடத்தில் எடுத்துச் செல்ல முயற்சி செய்து வருகிறார்.

அவருக்கே உரித்தான தனிப்பாணியில் அஷ்டோத்திர சங்கீதகாரம் என்னும் தலைப்பில் 108 மாணவர்களுடன் அவர் பல ஆலயங்களிலும் அரங்கங்களிலும் அறங்கேற்றிய இசைக்கச்சேரிகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. பல நாளேடுகளும் மாத இதழ்களும் முனைவர் பா.சிவா அவர்களின் தனித்துவமிக்க இசைப்பணியை பாராட்ட தவறவில்லை.

டாக்டர் சிவா அவர்களின் தனித்துவம் வாய்ந்த இசைப்பயணம் என்று சொல்லும்படி யாரும் இதுவரை செய்யத் துணியாத வகையில் திருமுறை மற்றும் திருப்புகழ் பாடல்களை சரியான சொல் பிரிப்போடு, இளைய தலைமுறையும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் ராகம் பண் தவறாமல் பாடும் ஆற்றலைக் கண்டு வியக்காதவர் உளரோ? அதிலும் விருத்தங்களை இனிமை குன்றாத பொருள் விளங்க பாடும் ஆற்றல் கடவுள் அவருக்கு அளித்த வரமன்றோ...

இவரின் இசைப்பணி தமிழ்நாட்டின் எல்லையுடன் நின்று விடவில்லை, மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இலங்கை, துபாய், ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல இசை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அண்ணாரை ஆலோசகராக ஏற்று தமது கலையையும் கலாச்சாரத்தையும் மக்களிடையே பரப்பி வருவது மகிழ்வூட்டுகிறது.

தொடர்க! வளர்க!! அன்னாரின் தெய்வீக இசைப்பணி!!!